# நூதன முறையில் கூகுள் மேப்ஸ் மூலம் நில அபகரிப்பு

## டிஜிட்டல் மோசடி தகர்ப்பு







பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 15 சோழிங்கநல்லூர் வார்டு 199ல் உள்ள சூளைமேடு சேது என்பவருக்குச் சொந்தமான விவசாய நிலத்தை அபகரிக்கும் நோக்கில் சில ரியல் எஸ்டேட் கட்டுமான நிறுவனங்கள் செயல்பட்டு வருகிறது.

இதற்காக சென்னை மாநகராட்சி அதிகாரிகளின் உடந்தையுடன், அந்தத் தனியார் நிலத்தின் வழியாக சட்டத்திற்கு புறம்பான வகையில் மாதிரி பள்ளி சாலை விரிவு (Model School Road Extension) என்ற பெயரில் ஒரு சர்ச்சை சாலை போடப்பட்டது.

### கூகுள் வரைபடத்தில் மோசடி

கட்டுமான நிறுவனங்கள் தங்களது அடுக்கு மாடி குடியிருப்புகளுக்கு சாலை வசதி தண்ணீர் வசதி உள்ளது போல் வாடிக்கையாளர்களை நம்பவைத்து ஏமாற்றி சொத்து மதிப்பை கூட்டி விற்பனை செய்வதற்காக அந்த விவசாய நிலத்தை ஒரு நீர்நிலையாகக் காட்டி அதனை உண்மை என நம்ப வைப்பதற்காக அதற்கு கூகுள் மேப்ஸில் Subramanya Lake என்று பெயர் வைத்து நில அபகரிப்பு செய்யவும் திட்டமிட்டனர்.

இதற்காக கூகுள் வரைபடத்தில் (Google Maps) அந்த நிலம் இருக்கும் இடத்தில் ஒரு "ஏரி" இருப்பதாகத் தவறான பதிவுகளை (Fake Digital Entries) ஏற்படுத்தினர். இதன் மூலம் அந்த நிலம் அரசுக்குச் சொந்தமான நீர்நிலை எனத் தோற்றத்தை உருவாக்க முயன்றனர்.




தனது நிலம் டிஜிட்டல் முறையிலும் தந்திரமான முறையில்

கூட்டுச் சதி மூலம் அபகரிக்க முயல்வதைக் கண்ட சேது, உடனடியாக தாம்பரம் காவல் ஆணையரிடம் புகாரளித்தார். இதன் பேரில் ஆணையர் உத்தரவு அடிப்படையில் சைபர் கிரைம் போலீசார் புலன் விசாரணை செய்து சட்டப்படி நடவடிக்கைகள் எடுத்து

கூகுள் வரைபடத்தில் தவறான தகவல்களைப் பதிவேற்றி, நில உரிமையாளருக்குப் பாதிப்பு ஏற்படுத்துவது சைபர் குற்றம் என்பதால்

விசாரணை மற்றும் நடவடிக்கை மேற்கொண்டு சைபர் கிரைம் போலீசார் அளித்த ஆதாரங்கள் மற்றும் எடுத்த நடவடிக்கைகள் அடிப்படையில், கூகுள் நிறுவனம் அந்தத் தவறான

பதிவை வரைபடத்திலிருந்து நீக்கியது.

தவறான தகவல் நீக்கப்பட்ட பிறகு, சேது தற்போது அவர் தனது நிலத்தை கூகுள் வரைபடத்தில் "தமிழ் குடியரசர் சேது பண்ணை" என்று தனது பெயரிலேயே பதிவேற்றம் செய்து, உலக பிரசித்தி பெற்ற கூகுள் வரைப் படத்தில் டிஜிட்டல் உரிமையையும் மீட்டெடுத்துள்ளார்.




அது என்ன தமிழ் குடியரசர்? என்று சேதுவிடம் கேட்டபோது அதற்கு அவர், நமது தாய்மொழி தமிழ் என்பதால் "தமிழ்" என்றும் இந்திய குடியரசு நாட்டில் பிறந்த எல்லோரும் இந்த நாட்டின் அரசர்களே என்பதை பறைசாற்றும் வகையில் "குடியரசர்" என்ற சொல்லையும்

சேர்த்து தமிழ் குடியரசர் சேது பண்ணை என பெயரிட்டுள்ளதாக தெரிவித்தார்.

இந்தியாவில் பிறந்த ஒவ்வொருவரும் தங்களை இந்த நாட்டின் குடிமகன்களாக கருதாமல் குடியரசர்கள் என்ற எண்ணம் வந்தால்தான் ஆட்சியாளர்களும் அரசு அலுவலர்களும் நமக்கு வேலை செய்ய வேண்டிய நமது வேலையாட்கள்தானே தவிர நமக்கு முதலாளிகள் இல்லை என்ற புரிதலும் மன தெளிவும் வரும்.மக்களுக்கு இந்த புரிதல் வந்து விட்டால் தேவையற்ற பயம் போய்விடும்.நமது வேலையாட்களான மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்களிடம் எப்படி நமக்கு தேவையான வேலைகளை வாங்க வேண்டும் என்ற தெளிவு பெறுவார்கள். இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தை தெரிந்து புரிந்து கொண்டால் இங்கு மக்களே முதலாளிகள் என்ற உரிமையுடன் முறையான அணுகுமுறையை கையாண்டால் ஜனநாயக உரிமைகள் சட்டப்படி பெறலாம் என்றார்.

"தமிழ் குடியரசர்" சேது அனைவருக்கும் முன்னுதாரணமாக திகழ்கிறார் என்றால் மிகையில்லை.